திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்குச் சம்பளப் பட்டுவாடாச் சட்டம், நிலை ஆணைச் சட்டம், சேவைக் கால விதிகளைப் பகிரங்கமாக மீறி வருகிறார்களே அவர்கள் மீது சட்டபூர்வமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டனவா? ஆமெனில், எத்தனை நிறுவனங்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

9–50 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, தனியார் பஸ் நிறுவனங்களில் பணிபுரிகின்ற தொழிலாளர்கள் நமது குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தின் கீழ் நிச்சயமாக வருவார்கள். அப்படித் தமிழ்நாட்டில் இருக்கின்ற எந்த பஸ் கம்பெனியிலாவது, குறிப்பிட்டு அவர்கள் இது போல அமல்படுத்தவில்லை என்று தெரிவிப்பார்களானால் உடனடியாக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கனவே இதை விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன். பல்வேறு முறை தனியார் பஸ் தொழிற்சங்கம் சார்பாக மனுக்கள் தரப்பட்டு, மனு தரப்பட்ட இடங்களில் எல்லாம் ஆய்வு செய்யப்பட்டு அங்கு யார் யார் மீறியிருக்கிறார்களோ அவர்கள் மீது அரசின் விதி எண் 36 மற்றும் 35-இன் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், எந்தத் தனியார் பஸ் நிர்வாகத்தினராக இருந்தாலும், குறைந்தபட்ச ஊதியமோ அல்லது அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய சலுகைகள் அரசின் சார்பாகச் சட்ட விதிகளின்படி கிடைக்கக் கூடிய விதிகளின்படி கிடைக்கவில்லை என்றால் நிச்சயமாக அரசின் சார்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'தமிழரசு' பத்திரிகை

* 5808 திரு. எஸ். என். எம். உபயதுல்லா :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

'தமிழரசு' பத்திரிகையை அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழரசு" பத்திரிகையை அனைத்து அரசு அலுவலகங்களுக்கும் இலவசமாக வழங்கும் நடவடிக்கை குறிப்பு ஏதுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 மே 8]

திரு. இளம்வழுதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, '' தமிழரசு '' பத்திரிகை எத்தனை பிரதிகள் அச்சடிக்கப்படுகின்றன? அது இலாபத்தில் ஓடுகிறதா அல்லது நஷ்டத்தில் இயங்குகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, * * முதல்வர் கலைஞர் அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு '' தமிழரசு '' பத்திரிகை ஒரு இலட்சம் பிரதிகள் இன்றைக்கு . . . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; தலைவரவர்களே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டுச் சொல்லி விடையோ அல்லது வினாவோ இருக்கக் கூடாது என்பது நியதி. எனவே, அந்தக் குறை சொன்ன வாக்கியத்தை அகற்றிவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன அந்தப் பகுதி அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இப்பொழுது ஒரு இலட்சம் பிரதிகள் விற்றுக் கொண்டிருக்கின்றன. மேலும்—தமிழில் ஒரு இலட்சம் பிரதிகளும், ஆங்கிலத்தில் பத்தாயிரம் பிரதிகளும் விற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தப் பிரதிகளில் சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசுச் செயலாளர்கள், இணைச் செயலாளர்கள் போன்றவர்களுக்கு 1,500 பிரதிகள் வரை இலவசமாக வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மேலும், இப்போழுது இருக்கின்ற நிதிநிலைமையில் மற்றவர்களுக்கெல்லாம் இலவசமாக வழங்குவதற்கு இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''தமிழரசு'' பத்திரிகை இன்றைக்குப் பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள நூலகங்களுக்கு வழங்குவதற்காகக் கொடுக்கப்பட்டு, பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படாமல் இருக்கிறது. ஆகவே கண்டிப்பாக ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் வழங்கப்பட வேண்டுமென்று அரசு உத்தரவிடுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் வழங்கப்படவேண்டுமென்றுதான் அந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கப்படுகின்றன. அவர்கள் அவ்வாறு வழங்கவில்லை என்றால் அரசின் சார்பாக அவர்களுக்கு வழங்கச் சொல்லி உத்தரவு பிறப்பிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : தலைவர் அவர்களே, சட்டமன்ற நிகழ்ச்சிகளுக்கு என்று அந்தத் தமிழரசு பத்திரிகையில் 2, 3 பக்கங்கள் ஒதுக்கி, அவற்றைப் போடுவதற்கு இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9–55 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களை மறுபடியும் அந்தக் கேள்வியைக் கேட்கு மாறு கேட்டுக் கொள்கிறேன்.

பாதுகாப்புக் காவலர்கள்.

*6752 திரு. உ. ரா. வரதராசன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) பாதுகாப்புக் காவலர்களாகப் பணியாளர்களை காண்ட்ராக்ட் முறையில் தொழிலகங்களுக்கு அனுப்பும் ஏஜென்சி நிறுவனங்களின் ஊழியர்களுடைய பணி பாதுகாப்பு மற்றும் ஊதிய நிர்ணயம் தொடர்பாகச் சட்டம் இயற்றுவதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) இது போன்ற ஏஜென்சி நிறுவனங்களை காவல் துறையின் துணை அமைப்பாக அரசே ஏற்று நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு கே. என். நேரு: தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாட்டிலுள்ள தொழிற்சாலைகளிலும், தொழிற் நிறுவனங்களிலும், தனியார்களின் கீழ் பாதுகாவலர்களாக பணி புரியும் தொழிலாளர்களின் வேலைவாய்ப்பினையும், பணிநிலை மைகளையும் முறைப்படுத்துவதற்கும், ஊதியம் மற்றும் இதர சலுகைகள் அளிப்பதற்கு வேண்டி தனியாகவே சட்டமொன்றை இயற்ற இந்த அரசு முடிவு செய்துள்ளது. மத்திய அரசின் இசைவு பெற்றதும், அதற்கான சட்டமுன்வடிவு சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்யப்படும்.

(ஆ) இல்லை. இதற்கென தனி வாரியம் ஒன்றை அமைத்து அதன் வாயிலாக தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள அரசு தீர்மானித்துள்ளது.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, இதுபோன்ற பணியில் ஈடுபடக்கூடிய தனியார் நிறுவனங்களை பெரும்பாலும் காவல் துறையிலிருந்து ஓய்வு பெற்ற அதிகாரிகள் நடத்தி வருகிறார்கள். அங்கே அந்த ஊழியர்களுக்கு எந்தவிதமான பணி பாதுகாப்போ அல்லது உத்தரவாதமான கூலியோ இல்லாத